2024 பெப்ரவரி 21ஆந் திகதியின் சபை அலுவல்கள் **திகதி :** 2024-02-21

பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளருமான கௌரவ அஜித் ராஜபக்ஷ அவர்கள் தலைமை வகித்தார்கள்.

சபாநாயகரின் அறிவித்தல்கள்

A : கௌரவ அநுராத ஜயரத்ன, பா.உ. அவர்களினது சிறப்புரிமை மீறப்பட்டதாக கேள்வி எழுப்பிய விடயம்

சபாநாயகரினால் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்

A.
(i) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் -
- 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XL ஆம் பகுதியையும்;
- 2021 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XLVIII ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXXVI மற்றும் XXXVII ஆம் பகுதிகளையும்; மற்றும்
- 2022 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXXIX ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXII மற்றும் XXIII ஆம் பகுதிகள்

(ii) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கையின் எட்டாவது தொகுதியினது I ஆம் பகுதி சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்கள் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்கள் சுற்றுலா கைத்தொழிலுக்கு பங்களித்தல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு அறிக்கை

B. இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கையின் எட்டாவது தொகுதியினது II ஆம் பகுதி - இலங்கையில் இடம்பெறும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் அனர்த்தங்கள் முகாமைத்துவத்திற்காக தொடர்புபடும் நிறுவனங்களின் செயலாற்றுகை தொடர்பான கணக்காய்வு அறிக்கை

பத்திரங்கள் சமர்ப்பித்தல்

(i) 2021 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளுக்கான பட்ட மேற்படிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கை
(ii) 2022 ஆம் ஆண்டுக்கான காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை
(iii) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை

(iv) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை.

(v) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிதி ஆணைக்குழு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை.

(vi) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகள்

(vii) அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அறிக்கை அக்குழுவின் தவிசாளர் கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டது.

சிறப்புரிமைக் கேள்விகள்

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

தன் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து சமூக வலைதளங்களில் வெளியான செய்தி

சட்டமூலங்கள் சமர்ப்பணம்

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தைத் திருத்துவதற்காக

"வங்கித்தொழில் (திருத்தம்)"

எனும் சட்டமூலத்தினை கௌரவ அரசாங்கக் கட்சி முதற்கோலாசான் அவர்கள் பிரேரித்தார்.

தனியார் உறுப்பினர்கள் சட்டமூலங்கள்

கௌரவ உதய கம்மன்பில அவர்களுக்கு **"அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தச்"**

சட்டமூலத்தினை சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்

(இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் 1 முதல் 5 வரையான) பின்வரும் விடயங்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டன.:-

(i) **அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் கீழ் இரண்டு தீர்மானங்கள்**

(ii) **நீதித்துறைச் சட்டத்தின் கீழ் மூன்று ஒழுங்குவிதிகள்**

ஒத்திவைப்புப் பிரேரணை

"நாட்டின் தற்போதைய நிலைமை" தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணை கௌரவ துஷார இந்துனில் அமரசேன அவர்களால் சபையில் பிரேரிக்கப்பட்டது.

அதனையடுத்து, 1730 மணியளவில் பாராளுமன்றமானது 2024 பெப்ரவரி 22ஆந் திகதி வியாழக்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

* இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.